மும்மொழி கல்விக்கொள்கையை ஏற்றுக்கொண்டால் தான் நிதி என்பதா?

'தமிழ்நாடு அரசு யாருக்காகவும் அடி பணியாது:' அமைச்சர் கோவி.செழியன் உறுதி

சென்னை, பிப்.18–

மும்மொழி கல்விக் கொள்கையை ஏற்றுக்கொண்டால் தான் நிதி தருவோம் என்ற மத்திய மந்திரியின் பேச்சு ஆணவத்தின் உச்சம் என்றும், நிதிக்காக தமிழ்நாடு அரசு யாருக்காகவும் அடி பணியாது என்றும் அமைச்சர் கோவி.செழியன் தெரிவித்துள்ளார்.

திருவள்ளுவர் சிலை வெள்ளிவிழா நிறைவையொட்டி, கல்லூரி கல்வி இயக்ககம் சார்பில் நடத்தப்பட்ட போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவர்களுக்கு பாராட்டு சான்றிதழ் வழங்கும் நிகழ்ச்சி, சென்னை சைதாப்பேட்டையில் உள்ள தமிழ்நாடு திறந்தநிலை பல்கலைக்கழக வளாகத்தில் நேற்று நடைபெற்றது.

உயர்கல்வித்துறை அமைச்சர் கோவி. செழியன், சிறப்பு விருந்தினராக பங்கேற்று, போட்டியில் வெற்றி பெற்ற 333 மாணவர்களுக்கு, பரிசுகளையும், பாராட்டு சான்றிதழ்களையும் வழங்கி கவுரவித்தார். மேலும், வெளிநாடு செல்ல தடையின்மை சான்று பெறுவதற்கான இணையதள சேவையையும் அவர் தொடங்கி வைத்தார்.

இந்த நிகழ்வில், அமைச்சர் கோவி. செழியன் பேசியதாவது:

திருவள்ளுவர் அனைவருக்கும் பொதுவானவர். தமிழர்களுக்காக இருக்கக்கூடிய உலக அடையாளம். திருக்குறள் தமிழர்களின் பண்பாட்டு அடையாளம். திருவள்ளுவருக்கு சாயம் பூச நினைக்கிற தீயவர்களை விரட்டியடிக்க கடமைப் பட்டிருகின்றோம். இந்தியாவில் உயர்கல்வியில் தலைசிறந்த மாநிலமாக தமிழ்நாடு உருவெடுத்துள்ளது. உயர்கல்வியில் மாணவர் சேர்க்கையில் மற்ற மாநிலங்கள் 28 சதவீதம். ஆனால்,

தமிழ்நாடு 48 சதவீதமாக முதலிடத்தில் உள்ளது. ஆராய்ச்சிப் படிப்பு, பெண் கல்வியில் முதலிடம்.

புதிய கல்விக் கொள்கை, 3,5 மற்றும் 8ம் வகுப்பு மணவர்களுக்கு பொதுத் தேர்வு என்கிறது. இது, தேவையற்ற ஒன்று. இதனால், இடைநிற்றல் அதிகரிக்கும். தமிழ்நாடு அரசின் இருமொழிக் கொள்கையையும் தற்போதுள்ள 10+2+3 என்ற கல்வி முறையே மாற்றக்கூடாது என்பது தமிழ்நாடு அரசின் நிலைப்பாடாகும்.

யு.ஜி.சி. புதிய வரைவு அறிக்கை ஏற்க கூடியதல்ல. இதை ஏற்காத பட்சத்தில் பட்டங்களை செல்லாத தாக்கப்படும் மற்றும் பல்கலைக்கழகங்களின் அங்கீகாரம் ரத்து செய்யப்படும் என மிரட்டுவது கூட்டாட்சியின் தன்மையை சீர்குலைக்கும். இது அரசியலமைப்புச் சட்டத்திற்கு முற்றிலும் எதிரானது.

இவ்வாறு அவர் பேசினார்.

தொடர்ந்து அவர் நிருபர்களிடம் கூறுகையில்,

''மும்மொழிக் கொள்கையை ஏற்கும் வரை தமிழகத்திற்கு நிதி கிடையாது என்று மிரட்டல் விடுப்பதை தமிழர்கள் ஒரு நாளும் பொறுத்துக்கொள்ள மாட்டார்கள். எங்கள் உரிமையைதான் கேட்கிறோம், உங்கள் தனிச் சொத்தை கேட்பது போல் திமிராக பேசினால் தமிழர்களின் தனிக் குணத்தை டெல்லி பார்க்க வேண்டியிருக்கும் என முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் தெரிவித்துள்ளார்கள்.

மத்திய அமைச்சரின் இந்த பேச்சு அகம்பாவம் மற்றும் ஆணவத்தின் உச்சம். ஒரு போதும் நிதிக்காக தமிழ்நாடு அரசும், முதல் அமைச்சரும் யாருக்காகவும் அடி பணிய மாட்டார்கள்' என்றார். இந்த நிகழ்ச்சியில், உயர்கல்வித்துறை செயலாளர் சமய மூர்த்தி, கல்லூரி கல்வி இயக்கக கமிஷனர் சுந்தரவல்லி ஆகியோர் கலந்து கொண்டனர்.

கடந்த நிதியாண்டில் ரூ.4,340 கோடி வருமானத்துடன் பா.ஜ.க. முதலிடம்

புதுடெல்லி, பிப்.18–

கடந்த நிதியாண்டில் பா.ஜ.க. ரூ.4 ஆயிரத்து 340 கோடி வருவாய் ஈட்டி முதலிடத்தில் உள்ளது. காங்கிரஸ் கட்சிக்கு ரூ.1,225 கோடி வருவாய் கிடைத்துள்ளது.

தேசிய அரசியல் கட்சிகள் தாக்கல் செய்த தணிக்கை அறிக்கையை ஆய்வு செய்து, ஜனநாயக சீர்திருத்த சங்கம் என்ற அமைப்பு ஒரு அறிக்கை வெளியிட்டுள்ளது. அதில், கட்சிகளின், வரவு, செலவு விவரம் இடம்பெற்றுள்ளது.

அறிக்கையில் கூறப்பட்டு இருப்பதாவது:

கடந்த 2023–2024 நிதியாண்டில், பா.ஜ.க.வின் மொத்த வருமானம் ரூ.4 ஆயிரத்து 340 கோடியே 47 லட்சம். இது, 6 தேசிய கட்சிகளின் மொத்த வருமானத்தில் 74 சதவீதம் ஆகும்.

இத்தொகையில், 50.96 சதவீதம் மட்டும், அதாவது ரூ.2 ஆயிரத்து 211 கோடியே 69 லட்சம் மட்டும் பா.ஜனதா செலவழித்துள்ளது.

காங்கிரஸ் கட்சிக்கு ரூ.1,225 கோடியே 12 லட்சம் வருவாய் கிடைத்துள்ளது. அதில், 83 சதவீத தொகையான ரூ.1,025 கோடியே 25 லட்சத்தை காங்கிரஸ் கட்சி செலவழித்துள்ளது. அந்த செலவினங்களில், தேர்தல் தொடர்பான செலவுகளுக்கு ரூ.619 கோடியே 67 லட்சமும், நிர்வாகம் மற்றும் பொது செலவுகளுக்கு ரூ.340 கோடியே 70 லட்சமும் காங்கிரஸ் கட்சி செலவிட்டுள்ளது.

மேலும், காங்கிரசுக்கு கிடைத்த வருமானங்களில், கூப்பன் விற்பனை மூலம் கிடைத்த ரூ.58 கோடியே 56 லட்சமும் அடங்கும்.

தேசிய கட்சிகள் பெற்ற வருமானங்களில் பெரும்பகுதி, தேர்தல் பத்திரங்கள் மூலம் கிடைத்தவை ஆகும். கடந்த ஆண்டு மே மாதம் தேர்தல் பத்திரங்களை சுப்ரீம் கோர்ட்டு ரத்து செய்து விட்டது.

இருப்பினும், அதற்கு முன்பு, தேர்தல் பத்திரங்கள் மூலம் பா.ஜனதா ரூ.1,685 கோடியே 63 லட்சமும், காங்கிரஸ் கட்சி ரூ.828 கோடியே 36 லட்சமும், ஆம் ஆத்மி ரூ.10 கோடியே 15 லட்சமும் பெற்றுள்ளன.

மேற்கண்ட 3 தேசிய கட்சிகளும் தேர்தல் பத்திரங்கள் மூலம் மொத்தம் ரூ.2 ஆயிரத்து 524 கோடியே 13 லட்சம் வருவாய் ஈட்டி உள்ளன. இது, அக்கட்சிகளின் மொத்த வருமானத்தில் 43.36 சதவீதம் ஆகும்.

கடந்த நிதியாண்டில், பல்வேறு அரசியல் கட்சிகள், தேர்தல் பத்திரங்கள் மூலம் ரூ.4 ஆயிரத்து 507 கோடி நன்கொடை பெற்றுள்ளன. அவற்றில், தேசிய கட்சிகள் பெற்ற நன்கொடை மட்டும் 55 சதவீதம் ஆகும்.

மார்க்சிஸ்ட் கட்சி நிர்வாக செலவினங்களுக்கு ரூ.56 கோடியே 29 லட்சமும், ஊழியர்கள் சம்பளத்துக்காக ரூ.47 கோடியே 57 லட்சமும் செலவழித்துள்ளது. கூப்பன் விற்பனை மூலம் ரூ.11 கோடியே 32 லட்சம் வருவாய் பெற்றுள்ளது.

மத்திய அமைச்சர் அமித்ஷா 25ந்தேதி கோவை ஈஷா மைய சிவராத்திரி விழாவில் பங்கேற்க வருகிறார்

கோவை, பிப்.18

மத்திய உள்துறை அமைச்சர் அமித்ஷா 25ந்தேதி கோவை வருகிறார். அவர், கட்சி அலுவலக திறப்பு விழா மற்றும் ஈஷா யோகா மைய சிவராத்திரி விழாவில் கலந்து கொள்கிறார்.

கோவையில் உள்ள ஈஷா யோகா மையத்தில் மகா சிவராத்திரி விழா வருகிற 26ந்தேதி மாலை நடக்கிறது. இதில் கலந்து கொள்வதற்காக மத்திய உள்துறை அமைச்சர் அமித்ஷா, விமானம் மூலம் வருகிற 25ந்தேதி இரவு 7 மணிக்கு கோவை வருகிறார்.

அன்று இரவு கோவை அவினாசி ரோடு நவ இந்தியா அருகே உள்ள ஒரு நட்சத்திர ஓட்டலில் தங்குகிறார்.

கோவை பீளமேட்டில் 25 சென்ட் பரப்பளவில் 12 ஆயிரம் சதுரஅடியில் கட்டப்பட்டுள்ள பா.ஜ.க. கட்சி அலுவலகத்தை 26ந்தேதி காலை 10.30 மணிக்கு அமித்ஷா திறந்து வைக்கிறார். இதையடுத்து பகல் 1 மணிக்கு பா.ஜனதா மாநில நிர்வாகிகள் கூட்டத்தில் அமித்ஷா கலந்துகொள்கிறார்.

மாலை 5.30 மணிக்கு ஈஷா யோகா மையத்தில் நடைபெறும் மகாசிவராத்திரி விழாவில் பங்கேற்கிறார். இரவு 8 மணிக்கு விமானம் மூலம் டெல்லி புறப்பட்டு செல்கிறார்.

கோவை வரும் அமித்ஷாவுக்கு பா.ஜ.க. சார்பில் விமான நிலையம் மற்றும் கட்சி அலுவலகம் ஆகிய பகுதிகளில் மேளதாளம் முழங்க சிறப்பான வரவேற்பு அளிக்கப்பட உள்ளது.

அமித்ஷா வருகையை யொட்டி கோவை மாவட்ட மற்றும் மாநகர போலீசார் பாதுகாப்பு ஏற்பாடுகளை தீவிரப்படுத்தி உள்ளனர்.

IDFC FIRST Bank

ஐடிஎப்சி பர்ஸ்ட் பேங்க் லிமிடெட்

CIN: L65110TN2014PLC097792
Website : www.idfcfirstbank.com; Email: bank.info@idfcfirstbank.com
பதிவு அலுவலகம்: கேஆர்எம் டவர், 7வது தளம், எண். 1, ஹாரிங்டன் ரோடு, சேத்துப்பட்டு, சென்னை600 031. தமிழ்நாடு, இந்தியா, போன் : +91 44 4564 4000;
கார்பொரேட் அலுவலகம்: ஐடிஎப்சி பர்ஸ்ட் பேங்க் டவர், (தி ஸ்கொயர்), C61, பெயிளாக், பந்த்ராகுர்லா காம்ப்ளக்ஸ், பந்த்ரா (கிழக்கு), மும்பை400 051. போன் : +91 22 7132 5500

தபால் வாக்கு அறிவிப்பு

கம்பெனிகள் சட்டம், 2013ன் (**''கம்பெனிகள் சட்டம்''**), பிரிவுகள் 108, 110 மற்றும் இதர பொருந்தக்கூடிய விதிகள், வேறு ஏதேனும் இருப்பின் அவற்றுடன் கம்பெனிகள் (மேலாண்மை மற்றும் நிர்வாகம்) விதிகள், 2014ன் விதி 20 மற்றும் 22 மற்றும் இந்திய அரசின் கார்ப்பரேட் விவகார அமைச்சகத்தால் வெளியிடப்பட்ட (இனிமேல் கூட்டாக "தொடர்புடைய சுற்றறிக்கைகள்" என்று குறிப்பிடப்படுகிறது) ஏப்ரல் 08, 2020 தேதியிட்ட பொது சுற்றறிக்கை எண்.14/2020, ஏப்ரல் 13, 2020 தேதியிட்ட 17/2020 மற்றும் செப்டம்பர் 19, 2024 தேதியிட்ட 09/2024 உட்பட தொடர்புடைய சுற்றறிக்கைகள் மற்றும் செக்யூரிட்டீஸ் அன்ட் எக்ஸ்சேஞ்ச் போர்டு ஆப் இந்தியாவின் (பட்டியல் கட்டுப்பாடுகள் மற்றும் வெளியீட்டு தேவைகள்) விதிகள், 2015ன் (**''செபி பட்டியல் கட்டுப்பாடுகள்''**) விதி 44 மற்றும் இன்ஸ்டிடியூட் ஆப் கம்பெனி செக்ரட்டரிஸ் ஆப் இந்தியா வெளியிட்ட பொதுக் கூட்ட செயலக தரநிலை (**''எஸ்எஸ்2''**) மற்றும் இதர பொருந்தக்கூடிய சட்டங்கள் மற்றும் ஒழுங்குமுறைகள் ஆகியவற்றின்படி (தற்போதைக்கு நடைமுறையில் உள்ள சட்டப்பூர்வ திருத்தங்(கள்) அல்லது அதன் மறு அமலாக்கம்(கள்) உட்பட) பின்வரும் சிறப்பு வணிகங்கள் வங்கியின் உறுப்பினர்களால், தொலைதூர மின்னணு வாக்களிப்பு செயல்முறையின் மூலம் (**''தொலைதூர மின்னணுவாக்களிப்பு''**) மட்டுமே தபால் வாக்குச்சீட்டின் மூலம் நிறைவேற்றப்படும் என்று இந்த அறிவிப்பு மூலம் ஐடிஎப்சி பர்ஸ்ட் பேங்க் லிமிடெட் (**''வங்கி'' அல்லது 'ஐடிஎப்சி பர்ஸ்ட் பேங்க்''**) பங்குதாரர்களுக்கு (**''உறுப்பினர்கள்''**) தெரிவிக்கப்படுகிறது.

வரிசை எண்	தீர்மான விவரச் சுருக்கம்	தீர்மான வகை
1	அங்கீகரிக்கப்பட்ட பங்கு மூலதனத்தில் மாற்றம் மற்றும் அதன் விளைவாக மெமோரண்டம் ஆப் அசோசியேஷனின் மூலதனப் பிரிவில் திருத்தம்.	சாதாரண தீர்மானம்
2	சம்பந்தப்பட்ட தரப்பினருடன் பத்திரங்களை (கருவூல பில்கள், அரசு பத்திரங்கள் மற்றும் மாநில மேம்பாட்டுக் கடன்கள்) கையாள்வதற்கான அவை சார்ந்த பரிவர்த்தனைகள்.	சாதாரண தீர்மானம்

தொடர்புடைய சுற்றறிக்கைகளுக்கு இணங்க, கட்ஆப் தேதியான **வெள்ளிக்கிழமை, பிப்ரவரி 14, 2025** ("கட்ஆப் தேதி") அன்று நேஷனல் செக்யூரிட்டீஸ் டெபாசிட்டரி லிமிடெட் ("என்எஸ்டிஎல்") மற்றும் சென்ட்ரல் டெபாசிட்டரி சர்வீசஸ் (இந்தியா) லிமிடெட் ("சிடிஎஸ்எல்") ஆகியவற்றிலிருந்து பெறப்பட்ட (ஒட்டுமொத்தமாக "டெபாசிட்டரிகள்" என்று குறிப்பிடப்படுகிறது) உறுப்பினர் பதிவேட்டில் / நன்மை பயக்கும் உரிமையாளர்களின் பட்டியலில் பெயர்கள் உள்ள உறுப்பினர்களுக்கும் மற்றும் யாருடைய மின்னஞ்சல் முகவரி வங்கி / கேபின் டெக்னாலஜிஸ் லிமிடெட் ("Kfintech"), வங்கியின் பதிவாளர் மற்றும் பரிமாற்ற முகவர் ("RTA") / டெபாசிட்டரிகள் / டெபாசிட்டரி பங்கேற்பாளர்களுடன் பதிவு செய்யப்பட்டுள்ளதோ அவர்களுக்கு விளக்க அறிக்கையுடன் தபால் வாக்குச் சீட்டின் அறிவிப்பு ("தபால் வாக்குச் சீட்டு அறிவிப்பு") ஆகியவற்றை மின்னணு முறையில் அனுப்பும் பணியை வங்கி பிப்ரவரி 17, 2025 அன்று நிறைவு செய்துள்ளது.

தொடர்புடைய சுற்றறிக்கைகளுக்கு இணங்க, தபால் வாக்குப் படிவத்துடன் கூடிய தபால் வாக்குச் சீட்டின் நகல் மற்றும் முன்பணம் செலுத்திய வணிகப் பதில் உறை உறுப்பினர்களுக்கு அனுப்பப்படாது. அதன்படி, மேற்கூறிய தீர்மானம் தொடர்பாக வாக்களிக்கத் தகுதியான உறுப்பினர்களின் ஒப்புதல் அல்லது மறுப்புத் தகவல் பரிமாற்றம் தபால் வாக்குச் சீட்டுப் படிவங்களைச் சமர்ப்பிப்பதற்குப் பதிலாக மின்னணு முறையில் வாக்களிப்பதன் மூலம் தொலைதூர மின்னணு வாக்குப்பதிவு மூலம் மட்டுமே மேற்கொள்ளப்படுகிறது.

தபால் வாக்கு அறிவிப்பு நகல் வங்கியின் இணையதளம் www.idfcfirstbank.com மற்றும் வங்கியின் சமபங்குகள் பட்டியலிடப்பட்டுள்ள ஸ்டாக் எக்சேஞ்ச் இணையதளங்கள் பிஎஸ்இ லிமிடெட்டின் (''பிஎஸ்இ'') www.bseindia.com மற்றும் நேஷனல் ஸ்டாக் எக்சேஞ்ச் ஆப் இந்தியா லிமிடெட்டின் (''என்எஸ்இ'') www.nseindia.com மற்றும் வங்கிக்கான தொலைதூர மின்னணு வாக்களிப்பு சேவை வழங்கும் முகவர் கேபின்டெக்கின் இணையதளம் https://evoting.kfintech.com ஆகியவற்றிலும் உள்ளது.

மின்னஞ்சல் முகவரிகளை பதிவு செய்யும் நடைமுறை:

டிமெட்டீரியலைஸ்டு முறையில் பங்குகளை வைத்திருக்கும் உறுப்பினர்கள் தங்கள் மின்னஞ்சல் முகவரிகளை சம்பந்தப்பட்ட டெபாசிட்டரி பங்கேற்பாளர்களுடன் பதிவு செய்ய/ புதுப்பிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். காகித வடிவில் பங்குகளை வைத்துள்ள உறுப்பினர்கள் மற்றும் வங்கியில் தங்கள் மின்னஞ்சல் முகவரிகளை புதுப்பிக்காத உறுப்பினர்கள் கையொப்பமிடப்பட்ட ஐஎஸ்ஆர்1 படிவத்துடன் பங்குச் சான்றிதழின் நகல் (முன் மற்றும் பின்), பான் கார்டின் சுய சான்றளிக்கப்பட்ட நகல் மற்றும் படிவத்தில் பரிந்துரைக்கப்பட்டுள்ள பிற ஆவணங்களை. https://ris.kfintech.com/clientservices/isc/default.aspx என்ற மின்னஞ்சல் முகவரியில் சமர்ப்பிப்பதன் மூலம் தங்கள் மின்னஞ்சல் முகவரிகளை பதிவு செய்யுமாறு/ புதுப்பிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். ஐஎஸ்ஆர்1 படிவம் வங்கியின் இணையதளம் https://www.idfcfirstbank.com/investors-ல் கிடைக்கிறது.

தொலைதூர மின்னணுவாக்களிப்புக்கான நடைமுறை:

தபால் வாக்குச்சீட்டு அறிவிப்பில் குறிப்பிடப்பட்டுள்ள தீர்மானங்கள் தொடர்பாக உறுப்பினர்கள் மின்னணு முறையில் வாக்களிக்க, தொலைதூர மின்னணு வாக்களிப்பை எளிதாக்குவதற்கு வங்கி கேபின்டெக் நிறுவனத்தை சேவையில் ஈடுபடுத்தி உள்ளது. கீழே கொடுக்கப்பட்டுள்ள காலத்தில் தொலைதூர மின்னணுவாக்களிக்கும் வசதி கிடைக்கும்:

தொலைதூர மின்னணு வாக்களிப்பு துவக்கம்	செவ்வாய்க்கிழமை, பிப்ரவரி 18, 2025 அன்று இந்திய நேரப்படி காலை 9.00 மணி
தொலைதூர மின்னணு வாக்களிப்பு முடிவு	புதன்கிழமை, மார்ச் 19, 2025 அன்று இந்திய நேரப்படி மாலை 5.00 மணி

மேற்கூறிய காலக்கட்டத்தில், கட்ஆப் தேதியான அதாவது **வெள்ளிக்கிழமை, பிப்ரவரி 14, 2025,** அன்று காகித வடிவிலோ அல்லது டிமெட்டீரியலைஸ் செய்யப்பட்ட வடிவிலோ பங்குகளை வைத்திருக்கும் உறுப்பினர்கள் மின்னணு முறையில் வாக்களிக்கலாம். தொலைதூர மின்னணுவாக்களிப்புக் காலம் முடிந்த பிறகு, தொலைதூர மின்னணு வாக்களிக்கும் வசதி கேபின்டெக்ஆல் நிறுத்தப்படும்.

உறுப்பினர்களின் வாக்களிக்கும் உரிமையானது, கட்ஆஃப் தேதி அதாவது **வெள்ளிக்கிழமை, பிப்ரவரி 14, 2025** அன்று, வங்கியின் மொத்த செலுத்தப்பட்ட ஈக்விட்டி பங்கு மூலதனத்தில் அவர்களின் பங்குகளின் விகிதத்தில் இருக்கும்.

தொலைதூர மின்னணுவாக்களிப்புக்கான வழிமுறைகள்:

தொலைதூர மின்னணு வாக்குப்பதிவுக்கான விரிவான வழிமுறைகள் தபால் வாக்குச்சீட்டு அறிவிப்பின் குறிப்பு எண்.19ல் கொடுக்கப்பட்டுள்ளன.

உறுப்பினர்கள் தீர்மானத்தின் மீது வாக்களித்தவுடன், அதை மாற்றி வாக்களிக்க முடியாது என்பதை நினைவில் கொள்ளவும்.

தபால் வாக்குப்பதிவின் முடிவு:

கம்பெனிகள் சட்ட விதிகள் மற்றும் அதன் கீழ் உருவாக்கப்பட்ட விதிகளின்படி. தபால் வாக்குப் பதிவை உண்மைத்தன்மையுடன் வெளிப்படையாக நடத்த அதன் ஆராய்வாளராக மெசர்ஸ் பண்டாரி & அசோசியேட்ஸ், பிராக்டிசிங் கம்பெனி செயலாளர்கள், திருமதி. மணிஷா மகேஸ்வரி (உறுப்பினர் எண். FCS: 13272 மற்றும் CP: 11031) அவர்களை இயக்குனர்கள் குழு நியமித்துள்ளது. அவர் பங்கேற்க தவறும்பட்சத்தில் அவருக்கு பதில் திரு. எஸ்.என். பண்டாரி, பிராக்டிசிங் கம்பெனி செயலாளர் (உறுப்பினர் FCS. 761 மற்றும் CP 366), மெசர்ஸ் பண்டாரி & அசோசியேட்ஸ், பிராக்டிசிங் கம்பெனி செயலாளர்கள் அவர்கள் மாற்று ஆராய்வாளராக இருப்பார்.

சட்டத்தின் பொருந்தக்கூடிய விதிகளின்படி. மின்னணு வாக்குப்பதிவு மூலம் அளிக்கப்பட்ட வாக்குகளை ஆய்வு செய்த ஆராய்வாளர், தனது அறிக்கையை தலைவர் அல்லது நிர்வாக இயக்குனர் அல்லது அவரால் அங்கீகரிக்கப்பட்ட நபரிடம் சமர்ப்பிக்க வேண்டும், அவர் **வெள்ளிக்கிழமை, மார்ச் 21, 2025க்குள்** மின்னணு வாக்குப்பதிவின் முடிவுகளை அறிவிப்பார்.

மேலும் இது வங்கியின் இணையதளம் : www.idfcfirstbank.com மற்றும் கேபின்டெக் இணையதளம் https://evoting.kfintech.com/ல் பதிவேற்றம் செய்யப்படும். அதே சமயம் பிஎஸ்இ மற்றும் என்எஸ்இ-க்கும் தெரிவிக்கப்படும்.

ஏதேனும் கேள்விகள்/குறைகள் இருந்தால், உறுப்பினர்களுக்கான அடிக்கடி கேட்கப்படும் கேள்விகள் (FAQs) மற்றும் https://evoting.kfintech.comன் 'பதிவிறக்க' பிரிவில் கிடைக்கும் தொலைதூர மின்னணு வாக்களிப்பு பயனர் கையேட்டைப் பார்க்கலாம் அல்லது 1800 309 4001 (கட்டணமில்லாதது) என்ற எண்ணில் கேபின்டெக்கை அழைக்கலாம் அல்லது கேபின் டெக்னாலஜிஸ் லிமிடெட் [யூனிட்: ஐடிஎப்சி பர்ஸ்ட் பேங்க் லிமிடெட்] மேலாளர் திருமதி கிருஷ்ண பிரியா அவர்களை, செலினியம் டவர் B, மனை எண். 31 & 32, பைனான்ஷியல் மாவட்டம் நானக்ராம்குடா, செரிலிங்கம்பள்ளி மண்டல், ஹைதராபாத் 500032, தெலுங்கானா, இந்தியா, மின்னஞ்சல்: einward.ris@kfintech.comல் தொடர்பு கொள்ளலாம்.

இயக்குனர்கள் குழுவின் ஆணைப்படி
ஐடிஎப்சி பர்ஸ்ட் பேங்க் லிமிடெட்டுக்காக
ஒப்பம்/
சதிஷ் செய்க்வாட்
பொது ஆலோசகர் மற்றும் கம்பெனி செயலாளர்

இடம்: மும்பை
தேதி: பிப்ரவரி 17, 2025

படிவம் எண். INC 26

[நிறுவனங்கள் (துவக்கம்) விதிகள், 2014ன் விதி 30ன் படி]
நிறுவனத்தின் பதிவு அலுவலகத்தை ஒரு மாநிலத்திலிருந்து மற்றொரு மாநிலத்திற்கு மாற்றுவதற்கான விளம்பரம்
மத்திய அரசு முன்பாக,
பிராந்திய இயக்குனர், தென் பிராந்தியம்
நிறுவனங்கள் சட்டம் 2013ன் பிரிவு 13 துணை பிரிவு (4) மற்றும் நிறுவனங்கள் (துவக்கம்) விதிகள் 2014, விதி 30 துணை விதி (5) பிரிவு (a)ன் விஷயத்தில் மற்றும்
வாட்டர்லூ இண்டஸ்ட்ரியல் பார்க் VII பிரைவேட் லிமிடெட்
(CIN- U42209TN2024PTC170899)
பதிவு அலுவலகம் : RMZ, மில்லினியா பிசினஸ், பார்க், கேம்பஸ் 1A, எண். 143, டாக்டர் எம்.ஜி. சாலை, (வடக்கு வீராணம் சாலை), பெருங்குடி, சோழிங்கநல்லூர், சென்னை 600096, பெருங்குடி, காஞ்சிபுரம், சைதாப்பேட்டை, தமிழ்நாடு, இந்தியா

விண்ணப்பதாரர் நிறுவனம்

15 பிப்ரவரி, 2025 அன்று நடைபெற்ற அசாதரண பொதுக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட சிறப்பு தீர்மானத்தின்படி, நிறுவனத்தின் பதிவு அலுவலகத்தை ''தமிழ்நாடு மாநிலம்'' சென்னையில் இருந்து ''மகாராஷ்டிர மாநிலம்'' புனேவில் உள்ள நிறுவனப் பதிவாளரின் அதிகார வரம்பிற்குள் உள்ள புனே நகருக்கு மாற்றுவதற்காக நிறுவனத்தின் நிறுவனங்களின் குறிப்பாணையில் திருத்தம் செய்வதை உறுதி செய்ய நிறுவனங்கள் சட்டம் 2013, பிரிவு 13ன் கீழ் மத்திய அரசுக்கு விண்ணப்பம் ஒன்றை தாக்கல் செய்ய நிறுவனம் திட்டமிட்டுள்ளது என்று பொதுமக்களுக்கு இதன் மூலம் அறிவிக்கப்படுகிறது.

நிறுவனத்தின் பதிவு அலுவலகத்தை மாற்றும் திட்டத்தினால் எவரது நலமேனும் பாதிக்கப்படுவதாக கருதுவாராயின், பாதிக்கப்படும் நலன் மற்றும் எதிர்ப்பதற்கான காரணத்துடன் கூடிய புகார் படிவத்தை அஃபிடவிட்டுடன் இணைத்து இந்த அறிவிப்பு விளம்பரம் வெளியான தேதியில் இருந்து பதினான்கு நாட்களுக்குள் பிராந்திய இயக்குனர் அவர்களுக்கு எம்சிஏ-21 போர்ட்டலில் (www.mca.gov.in) சமர்ப்பிக்கலாம் அல்லது பிராந்திய இயக்குனர், தென் பிராந்தியம், முகவரி : 5வது தளம், சாஸ்திரி பவன், 26 ஹாடோஸ் சாலை, சென்னை 600006, தமிழ்நாடு என்ற முகவரியில் நேரடியாக சமர்ப்பிக்கலாம் அல்லது பதிவுத் தபால் மூலம் அனுப்பலாம். அதன் நகல் ஒன்றை கீழ்கண்ட முகவரியில் உள்ள விண்ணப்பதாரர் நிறுவனத்தின் பதிவு அலுவலகத்திற்கு அனுப்ப வேண்டும்.
பதிவு அலுவலக முகவரி : RMZ, மில்லினியா பிசினஸ், பார்க், கேம்பஸ் 1A, எண். 143, டாக்டர் எம்.ஜி. சாலை, (வடக்கு வீராணம் சாலை), பெருங்குடி, சோழிங்கநல்லூர், சென்னை 600096, பெருங்குடி, காஞ்சிபுரம், சைதாப்பேட்டை, தமிழ்நாடு, இந்தியா

வாட்டர்லூ இண்டஸ்ட்ரியல் பார்க் VII பிரைவேட் லிமிடெட் சார்பாக
ஒப்பம்/-
ரோஹித் ஹெக்டே
இயக்குனர்
DIN: 00134926

நாள்: 18.02.2025
இடம்: புனே

HDFC BANK We understand your world

பதிவு அலுவலகம்: ஹெச்டிஎப்சி பேங்க் ஹவுஸ், சேனாபதி பாபட் மார்க், லோயர் பாரேல் (மேற்கு), மும்பை 400 013 மற்றும் அதன் அலுவலகம் ஒன்று உள்ளது
ரீடெய்ல் போர்ட்போலியோ மானேஜ்மெண்ட், ஹெச்டிஎப்சி பேங்க் லிமிடெட், 1வது தளம், ஐதிங்க் டெக்னோ வளாகம், கஞ்சூர்மார்க் (கிழக்கு), மும்பை 400042.

ஹெச்டிஎப்சி பேங்க் லிமிடெட்டில் அடமானம் வைக்கப்பட்டுள்ள பத்திரங்கள் விற்பனை அறிவிப்பு மற்றும் பொது அறிவிப்பு

பத்திரங்களுக்கு எதிரான கடன்/ஓவர் டிராப்ட்டின் தன்மையில் கடன் வசதிகளைப் பெறுவதற்காக, வங்கியில் அடமானம் வைக்கப்பட்டுள்ள பத்திரங்களை விற்பனை செய்வது குறித்து ஹெச்டிஎப்சி வங்கி லிமிடெட்டின் ("வங்கி") கீழே குறிப்பிடப்பட்டுள்ள கடன்தாரர்களுக்கு இதன் மூலம் அறிவிக்கப்படுகிறது.
ஒப்புக் கொள்ளப்பட்ட கடன் விதிமுறைகளின்படி நிலுவைத் தொகைகளை திருப்பிச் செலுத்துவதில் கடன்தாரர்கள் தொடர்ந்து தவறியதன் காரணமாக, கீழேயுள்ள கடன் கணக்குகள் கடனற்ற நிலையில் உள்ளன. இந்த கடன் வாங்குபவர்களுக்கு வங்கி கீழே குறிப்பிடப்பட்ட தேதியில் இறுதி விற்பனை அறிவிப்பு உட்பட பல அறிவிப்புகளை வெளியிட்டுள்ளது, வங்கி உறுதிமொழியை செயல்படுத்தி, கடன்தாரருக்கு கீழே உள்ள கணக்குகளில் உள்ள நிலுவைத் தொகையை முழுவதுமாக திருப்பிச் செலுத்த 7 நாட்கள் அவகாசம் வழங்கியது, தவறினால், இது தொடர்பாக மேலும் அறிவிப்பை வெளியிடாமல், அடமானம் வைக்கப்பட்டுள்ள பத்திரங்களை விற்க வங்கிக்கு சுதந்திரம் உள்ளது.
கடன்தாரர்கள் செலுத்த வேண்டிய தொகையை புறக்கணித்தனர் மற்றும் செலுத்தத் தவறி விட்டனர், எனவே, கடன் ஒப்பந்தத்தின் கீழ் வங்கி அதன் உரிமைகளைப் பயன்படுத்துவதன் மூலம், 25 **பிப்ரவரி,** 2025 அன்று அல்லது அதற்குப் பிறகு செலுத்த வேண்டிய நிலுவைத் தொகையை மீட்டெடுப்பதற்காக பத்திரங்களை விற்க/ அப்புறப்படுத்த முடிவு செய்துள்ளது. எந்த நோத்திலும், பங்குச் சந்தையில் ஏற்படும் ஏற்ற இறக்கம் காரணமாக, அடமானம் வைக்கப்பட்டுள்ள பத்திரங்களின் மதிப்பு மேலும் வீழ்ச்சியடைந்தால், மார்ஜின் தேவையில் மேலும் குறைபாட்டை உருவாக்கினால் பின்னர் வங்கி அதன் விருப்பத்தின் பேரில் அடமானம் வைக்கப்பட்டுள்ள பத்திரங்களை ஒரு (1) காலண்டர் நாளுக்குள், இது தொடர்பாக எந்த அறிவிப்பும் இல்லாமல் விற்கும் என்று கடன்தாரர்களுக்கு மேலும் அறிவிக்கப்படுகிறது. அடமான பத்திரங்களை விற்பனை செய்வதன் மூலம் கிடைக்கும் வருவாயை சரிசெய்த பிறகும் மீதமுள்ள நிலுவைத் தொகையை திருப்பிச் செலுத்த கடன்தாரர்கள் பொறுப்பேற்க வேண்டும்.

வ. எண்.	கடன் கணக்கு எண்	கடன்தாரர் பெயர்	15 பிப்ரவரி, 2025 அன்று செலுத்த வேண்டிய நிலுவைத் தொகை	விற்பனை அறிவிப்பு தேதி
1	XXXX0522	ஜி மோசஸ்	24,494.45	15-02-2025
2	XXXX0120	உண்ணாமலை எஸ்.எம்	20,591.78	15-02-2025
3	XXXX0439	வி ரங்கநாதன்	135.93	15-02-2025
4	XXXX1931	தீபாலி ஜெயின்	35,976.03	15-02-2025
5	XXXX8655	கே ஆர் கீதா ரமணி	7,09,519.33	15-02-2025
6	XXXX3175	காயத்ரி ஆர்	2,66,919.66	15-02-2025